**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி**
**அசல் வழக்கு எண். 396/2012**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | குமார் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | பெரியசாமி | தொழில் | .. | தறி கூலி |
| வயது | .. | 49 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | இடங்கணசாலை | நாள் | .. | 05.04.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. குமார் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.4 – குமார் - 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

நீங்கள் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. சிதம்பரத்தின் அப்பா பெயர் தெரியுமா என்றால், தெரியாது. சாமிநாதன் அப்பா பெயர் தெரியுமா என்றால், தெரியாது. இந்த வழக்கு சொத்து விபரங்கள் மற்றும் சர்வே எண், விஸ்தீரணம் பற்றி தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்தில் உள்ள வீட்டு கதவு எண் மற்றும் மின்சார இணைப்பு எண் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்திற்கான பட்டா ஆதியில் யார் பெயரில் வழங்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. யார் யார் மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரமும் தெரியாது என்று சொன்னால், சரிதான். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது.

ஒப்பம் / குமார்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.